**<u>அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி. 638 401</u>**

**<u>சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம்.</u>**

**<u>தொலைபேசி எண்: 04295 – 243289, 243366</u>**

**பசலி 1432 மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமானதும் பாத்தியப்பட்டதுமான கீழ்க்கண்ட உரிம இனங்களை பசலி 1432க்கு ( 01.07.2022 முதல் 30.06.2023 வரை மட்டும் ) நடத்திக்கொள்ள கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வருகிற **10.06.2022 ஆம்** தேதி **வெள்ளிக்கிழமை** பிற்பகல் 1.00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அன்றே பிற்பகல் 2.00 மணிக்கு இத்திருக்கோயில் மண்டபத்தில் இலாகா அலுவலர்கள் பரம்பரை அறங்காவலர்கள் முன்னிலையில் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடத்தப்படும். அந்தந்த இனத்திற்கு உயர்ந்த பட்ச கேள்வியில் ஏலம் நிறுத்தப்பட்டு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும். மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி இவற்றில் எது அதிகமோ, அந்தத் தொகைக்கு ஆணையரது இரத்து அங்கீகாரத்திற்குட்பட்டு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்படும். இந்த உரிம இனம் 1959 – ஆம் ஆண்டு சென்னை இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்குட்பட்டு நடத்தப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் வருகிற **25.05.2022 முதல் 09.06.2022 ஆம்** தேதி மாலை 5.45 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**உரிம இனங்கள் விவரம்.**

| வ. எண் | உரிம இனங்கள் விபரம் | உரிம காலம் பசலி 1432 ( 01.07.2022– 30.06.2023) | மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை ரூ. (வரைவோலை) | காப்புத் தொகை ரூ. ரொக்கம். |
|---|---|---|---|---|
| 1. | பிரசாதம் தயார் செய்து விற்பனை செய்யும் உரிமம். ( ஒரே இடம் ) | வருட உரிமம். | 10,00,000 /- | 50,000 /- |
| 2. | தேங்காய் பழக்கடையுடன் பூக்கடையும் சேர்த்து நடத்தும் உரிமம். (ஒரே இனம்) | வருட உரிமம். | 15,00,000 /- | 1,00,000 /- |
| 3. | பக்தர்களால் காணிக்கையாகக் கொடுக்கப்படும் முடியினை சேகரம் செய்து எடுத்துக் கொள்ளும் உரிமம். ( திருவிழா உட்பட ஒரே இனம்) | வருட உரிமம். | 5,00,000 /- | 50,000 /- |
| 4. | பண்ணாரி மாரியம்மன் திருவுருவப் படங்கள் வைத்து விற்பனை செய்து கொள்ளும் உரிமம். (ஒரே இடம்.) | வருட உரிமம். | 2,00,000 /- | 10,000 /- |
| 5. | சைவ உணவு விடுதி எண் 1 வைத்து நடத்தும் உரிமம். | வருட உரிமம். | 2,00,000 /- | 10,000 /- |
| 6. | நெய் தீபம் விற்பனை செய்து கொள்ளும் உரிமம் | வருட உரிமம். | 1,00,000 /– | 50,000 /– |

**இனம் –1**

1. பிரசாதங்கள் அனைத்தும் சுத்தமான முறையில் சுகாதார முறைப்படி தயாரித்து விற்பனை செய்ய வேண்டும். தினசரி நைவேத்தியம் செய்யப்பட்ட பிரசாதங்கள் ஒவ்வொரு இனத்திலும் ஒன்றினை அம்மன் சன்னதியில் பூசை செய்வதற்கு கட்டணமின்றி வழங்கப்பட வேண்டும்.
2. பூஜைக்காக விற்பனை செய்யப்படும் நெய், எண்ணெய் மற்றும் உணவு பிரசாதம் தயாரிக்கப் பயன்படுத்தக் கூடாது.
3. பிரசாதம் தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களான மாவுப்பொருட்கள், நெய் . எண்ணெய் போன்ற உணவு பொருட்களை FSSAI அக்மார்க் சான்றிதழ் பெற்ற பொருட்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் ( RO ) ISI தரமுள்ள தண்ணீரையே பயன்படுத்த வேண்டும்.
4. பிரசாதக் கடைகளில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் தயார் செய்யப்பட்ட தேதி ( Date of Manufacture ), பயன்படுத்தக் கூடிய காலம் காலாவதி தேதி அல்லது நாள் குறிப்பிட்டு அந்த நாளுக்கு முன்னர் பயன்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட வேண்டும். ( Date of Expiry or Best Before use ) எடை மற்றும் விலை ஆகியவை குறிப்பிட வேண்டும். காலாவதி தேதி முடிந்த பிறகு விற்பனை செய்யக் கூடாது.
5. காலாவதியான மாவுப்பொருட்களை பயன்படுத்தக் கூடாது.
6. காலாவதியான பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்ட பிரசாதங்களை விற்பனை செய்யக் கூடாது.
7. தரமான பொருட்களால் தயார் செய்யப்பட்ட பிரசாதங்களை விற்பனை செய்ய வேண்டும். நாள்பட்ட தரமிழந்த பிரசாதங்களை விற்பனை செய்யக்கூடாது. இதனால் அசம்பாவிதங்கள் ஏதாவது நிகழின் இதற்கு உரிமதாரரே முழுப்பொறுப்பாவார். இதன் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8. பிரசாதங்கள் திருக்கோயில் நிர்வாகத்தினரால் நிர்ணயிக்கப்படும் நிலையான எடை மற்றும் அளவு முறையில் செய்ய வேண்டும்.
9. பிரசாதங்கள் பொருட்கள் விலை மற்றும் எடை குறித்து பட்டியல் ( Display Board ) விளம்பரப் பலகை ஒன்று எழுதி பக்தர்களுக்கு நன்கு தெரியும்படி வைக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட பொருட்களை மட்டும் விற்பனை செய்ய வேண்டும்.
10. தினசரி விற்பனை செய்யப்படும் பிரசாதங்கள் அனைத்தும் எடை, தரம், மற்றும் தயாரிப்பு இடம், விற்பனை இடம் ஆகியவற்றையும் சுத்தம் சுகாதாரம் ஆகியவற்றையும் கண்காணிக்க துணை ஆணையர் / செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
11. பிரசாதங்களை பிளாஸ்டிக் பாக்கெட்டுகளில் நிரப்பி விற்பனை செய்வது தவிர்க்கப்பட வேண்டும். அதற்கு பதிலாக உணவு பாதுகாப்பு துறை பரிந்துரைக்கும் ( Food Grade ) பொருட்களை பயன்படுத்த வேண்டும். செய்தித் தாளில் பிரசாதம் மடிக்கக்கூடாது.
12. திருக்கோயில் வளாகத்தில் பிரசாதம் தயார் செய்ய வாடகையின்றி ஒதுக்கப்பட்ட இடத்தில் தான் தயார் செய்ய வேண்டும். மேற்படி இடம் திருக்கோயில் நிர்வாக நலன் கருதி மாறுதலுக்குட்பட்டது.

13. பிரசாதக்கடை தூய்மையாக இருக்க வேண்டும். பிரசாதங்கள் தயார் செய்யும் இடம் மற்றும் பிரசாதம் தயார் செய்யப் பயன்படுத்தும் பாத்திரங்கள் தூய்மையாக இருக்க வேண்டும்.

14. பிரசாதங்களை தயார் செய்பவர்கள் மற்றும் விற்பனை பிரிவில் பணிபுரியும் நபர்கள் எவ்வித தொற்று நோய் பாதிப்பும் இல்லாதவர்களாக இருக்க வேண்டும். மருத்துவ பரிசோதனை செய்து மருத்துவச் சான்று பெற வேண்டும்.

15. பக்தர்கள் என்ன பிரசாதம் கேட்கிறார்களோ அதை மட்டும் தான் வழங்க வேண்டும். சில பிரசாத வகைகளை ஒன்று சேர்த்து அப்படித்தான் மொத்தமாக பிரசாதம் வாங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தக்கூடாது.

16. உணவு பதப்படுத்துதல் மற்றும் தரப்படுத்துதல் ஆணையத்தின் தரக்கட்டுப்பாடு, விற்பனை மற்றும் தயாரிப்பு முறைகளை பின்பற்ற வேண்டும்.

17. Food Safety and Standard Act , Weight and Measures Act, Packaged Commodities Act பிரிவுகளின் படியான நெறிமுறைகளை பின்பற்றப்பட வேண்டும். பின்பற்றாமல் அதனால் ஏற்படும் அனைத்து விளைவுகளுக்கும் ஏலதாரரே முழுப் பொறுப்பாக்கப்படுவார். இதற்கு திருக்கோயில் நிர்வாகம் எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது.

18. தீயணைப்பான் கருவிகள் **( Fire Safety Equipments )** தங்கள் சொந்தப் பொறுப்பில் வாங்கி பிரசாதம் தயார் செய்யுமிடத்தில் பொறுத்திக் கொள்ள வேண்டும். மேலும் மணலுடன் தீ தடுப்பு வாளி தங்கள் சொந்த செலவில் கடைகளில் பொறுத்தப்பட வேண்டும். முதல் உதவிப் பெட்டி இருக்க வேண்டும். எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை உபயோகப்படுத்தக்கூடாது. அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்பட்டால் திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.

19. உரிமம் பெற்றவர்கள் ‘‘ தேவஸ்தான கடை’’ என்று திருக்கோயில் பெயரை பயன்படுத்தி விளம்பரப் பலகை வைக்கக் கூடாது.

20. பிரசாதங்கள் தயாரிப்பு தேதி மற்றும் காலாவதி தேதி குறிப்பிடாமல் விற்பனை செய்யக்கூடாது.

21. திருக்கோயிலில் தயாரிக்கப்படும் பிரசாதங்கள் Packege Date , Expiry Date, Trade Mark, Storage Contision குறித்த விபரங்களை FSSAI க்கு அனுப்பி சான்றிதழ் பெற வேண்டும்.

22. மேற்படி ஏல உரிமம் பெற்றவர் திருக்கோயில் மேற்குபுற பிரகார மண்டபத்திற்கு வெளியே பக்தர்கள் உணவருந்தும் மண்டபத்தை ஒட்டி வடக்குப்புறம் வடக்கு பார்த்த வகையில் **10’X 10’** அடி அளவில் நகரும் நிலையுலுள்ள பெட்டி அமைத்தும் தங்களது சொந்த செலவில் தற்காலிக கால்வாயூம் செட் அமைத்தும் உரிம இனத்தினை நடத்திக் கொள்ள வேண்டும்.

23. திருக்கோயில் மூலம் விற்பனை செய்யப்படும் எந்த ஒரு பொருளையும் விற்பனை செய்ய அனுமதி கிடையாது.

24. குங்குமம் திருக்கோயில் மூலம் தயாரித்து விற்பனை செய்யப்படுவதால் குங்குமம் விற்பனை செய்ய அனுமதி இல்லை.
25. பிரசாதங்கள் விற்பனை செய்வதால் திருக்கோயில் இடத்தில் ஏற்படும் குப்பைகளை உரிமதாரர் சொந்த பொறுப்பில் அப்புறப்படுத்த வேண்டும். விற்பனை நிலையம் முன் குப்பை தொட்டிகளை வைக்க வேண்டும்.

26. உரிம ஆணை கிடைக்கப்பெற்ற ஒரு மாத காலத்திற்குள் உணவு பாதுகாப்பு துறையில் பொருட்களை விற்பனை செய்வதாற்காக FSSAI உரிமம் பெற்று சான்றொப்பமிடப்பட்ட நகல் ஒன்றினை சமர்ப்பிக்க வேண்டும். பிரசாதங்கள் தயாரிப்பு தேதி, பேட்சு எண், மற்றும் காலாவதி ( Expiry Date ) தேதி ஆகியவற்றை பிரசாதம் அடைக்கப்பட்ட பொருள் மீது பக்தர்கள் பார்வைக்கு நன்கு தெரியும்படி கண்டிப்பாக அச்சிட்டு விற்பனை செய்யப்பட வேண்டும்.

27. பிரசாதம் தயார் செய்யும் இடத்தில் பயன்படுத்தப்படும் எரிவாயு அடுப்பு, எரிவாயு குழாய் மற்றும் ரெகுலேட்டர் ஆகியவை நல்ல நிலையில் இருப்பதை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அங்கீகரிக்கப்பட்ட எரிவாயு நிறுவனத்தின் தேர்ந்த மெக்கானிக்கைக் கொண்டு உறுதி செய்துக் கொள்ள வேண்டும். அதற்கான அத்தாட்சியை திருக்கோயில் நிர்வாகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். மேற்படி எரிவாயு இணைப்புக்களை காலமுறையில் சீரமைப்பு செய்யும் பணிக்கு AMC போடப்பட வேண்டும். அதற்கான அத்தாட்சியை சமர்ப்பிக்க வேண்டும்.

28. ஏல உரிமதாரர் கீழ்க்கண்ட பிரசாதங்களைத் தவிர வேறு எதுவும் தயார் செய்து விற்பனை செய்யக் கூடாது. கீழ்கண்ட விலைப் பட்டியல்படி தான் விற்பனை செய்ய வேண்டும். பிரசாத விற்பனை விலைப் பட்டியலை உரிமைதாரர் சொந்த பொறுப்பில் பக்தர்களுக்கு நன்கு பார்வையில் தெரியும்படி வைக்க வேண்டும். உரிம காலத்தில் விலைவாசி உயர்வு காரணமாக பிரசாத விற்பனை விலை உயர்வு செய்ய நிர்வாகத்தை கோரக் கூடாது. திருக்கோயில் நிர்வாகம் நிபந்தனையில் நிர்ணயிக்கும் எடை, மற்றும் விலையினை மாற்றாமல் பிரசாதங்களை தயாரித்து விற்பனை செய்ய வேண்டும். இந்நிபந்தனைகளை மீறி செயல்பட்டு துணை ஆணையர் / செயல் அலுவலரால் கண்டறிப்பட்டால் உரிமம் முன் அறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

**பிரசாதங்கள் விவரம்**

| வ. எண் | அனுமதிக்கப்பட்ட பொருட்கள் விவரம். | எடை | விற்பனை விலை |
|---|---|---|---|
| 1. | சர்க்கரை பொங்கல் | 100 கிராம் | 15.00 |
| 2. | புளிசாதம் | 100 கிராம் | 15.00 |
| 3. | லட்டு | 50 கிராம் | 15.00 |
| | லட்டு | 100 கிராம் | 25.00 |
| 4. | அதிரசம் | 50 கிராம் | 10.00 |
| | அதிரசம் | 100 கிராம் | 20.00 |
| 5. | தேன் குழல் | 50 கிராம் | 10.00 |
| 6. | முறுக்கு | 50 கிராம் | 10.00 |
| 7. | மிளகு வடை | 50 கிராம் | 10.00 |
| 8. | கற்கண்டு | 50 கிராம் | 10.00 |
| | கற்கண்டு | 100 கிராம் | 20.00 |

| | | | |
|---|---|---|---|
| 9. | பஞ்சாமிர்தம் | 500 கிராம் | 50.00 |
| 10. | வாசனை விபூதி | 50 கிராம் | 10.00 |
| | வாசனை விபூதி | 100 கிராம் | 20.00 |
| 11. | மஞ்சள் மற்றும் மஞ்சள் கயிறு | 1 பாக்கெட் | 10.00 |
| 12. | பேரீச்சம்பழம் | 100 கிராம் | 10.00 |
| | பேரீச்சம்பழம் | 200 கிராம் | 20.00 |
| 13. | புட்டமுது | 50 கிராம் | 10.00 |
| | புட்டமுது | 150 கிராம் | 30.00 |
| 14. | பிரசாத செட் 1 ( லட்டு – 1 , தேன்குழல் –1, அதிரசம் –1, கற்கண்டு பாக்கெட் –1 ( ஒவ்வொன்றும் 50 கிராம் ) , பேரிச்சம்பழம் பாக்கெட் –1 ( 100 கிராம் ) | 1 பாக்கெட் | 100.00 |
| 15. | அப்பம் | 50 கிராம் | 15.00 |

**இனம் – 2**

1. தற்கால நிலவரப்படி நிலவி வரும் விலை விவரம் முக்கிய இடத்தில் பொது மக்கள் பார்வையில் படும்படி தமிழில் எழுதி வைக்கப்பட வேண்டும்.
2. தேங்காய் பழக்கடையில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் கடைகளின் உட்புறம் வைத்து வியாபாரம் செய்யப்பட வேண்டும். பொரிகடலை விற்பனை செய்து கொள்ளலாம்.
3. தேங்காய் பழக்கடையுடன் பூக்கடையும் சேர்த்து நடத்தும் உரிமம் பெற்றவர் திருக்கோயிலின் மேற்குப்புற வாயிலின் வெளியே சருகு மாரியம்மன் திருக்கோயில் செல்லும் பாதையின் வடக்குப்புறம் 15’ X 20’ அடி அளவில் தங்களது சொந்த செலவில் தற்காலிக தகர சீட்டிலான தீப்பிடிக்காத செட் அமைத்து கொண்டு கடையை நடத்திக் கொள்ளலாம்.
4. சட்டத்திற்கு புறம்பான லாகிரி வஸ்துக்கள் கண்டிப்பாக விற்பனை செய்யக் கூடாது.
5. கீழ்கண்ட விலைப் பட்டியல்படி தான் விற்பனை செய்ய வேண்டும். அதிகமாக தொகைக்கு விற்பனை செய்வதாக புகார்கள் வரப்படுமாயின் ஏல உரிமம் ரத்து செய்து சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

| வ. எண் | பொருட்கள் விவரம் | விற்பனை விலை |
|---|---|---|
| 1. | <u>**அர்ச்சனை தட்டு 1க்கு**</u><br>( தேங்காய் –1, வாழைப்பழம் – 2, கற்பூரம் – 1, வெற்றிலை – 2, பாக்கு – 2, பத்தி – 2, எலுமிச்சம்பழம் – 1 , மஞ்சள் துணி பை – 1 , பட்டர் கவரில் நிரப்பப்பட்ட கல் உப்பு – 150 கிராம் , மிளகு – ½ கிராம் ) | ரூ. 100.00 |

6. தேங்காய் பழம் பூஜைப் பொருட்கள் செட் விற்பனை செய்வதுடன் தனியாக தேங்காயோ, மாலையோ, பழமோ அல்லது சூடம் பத்தி போன்ற பூஜை பொருட்கள் தனியாக பக்தர்கள் கேட்டால் மறுப்பின்றி விற்பனை செய்ய வேண்டும். செண்டுமல்லிமாலைகள் மற்றும் விடுபூக்கள் விற்பனை செய்யக்கூடாது. இது குறித்து புகார்கள் வரப்பெற்றால் ஏல உரிமம் ரத்து செய்து சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

7. நெய், நல்லெண்ணெய் விளக்கு, திரி ஆகியவற்றை தனியாகவோ அல்லது சேர்த்தோ விற்பனை செய்யக் கூடாது. எண்ணெய் பாக்கெட், சூடம் மற்றும் சாம்பிராணி நெய் பாக்கெட் விற்பனை செய்யக் கூடாது. மண்விளக்கு விற்பனை செய்யக்கூடாது.
8. தேங்காய் பழக்கடையில் அம்மன் திருவுருவப் படங்கள் எந்த வடிவத்திலும் விற்பனை செய்யக்கூடாது.
9. பூஜைக்கு உகந்ததல்லாத பூக்களை ( உதாரணமாக துலுக்கமல்லி பூ ) விற்பனை செய்யக் கூடாது.
10. உரிமம் பெற்றவர்கள் “ தேவஸ்தான கடை” என்று திருக்கோயில் பெயரை பயன்படுத்தி விளம்பரப் பலகை வைக்கக் கூடாது.
11. அன்றாடம் புத்தம் புதிய மாலைகள் விற்பனை செய்யப் பட வேண்டும். பழைய மாலைகள் ஏற்கனவே உபயோகப்படுத்திய மாலைகள் விற்பனை செய்யக் கூடாது.
12. விலை விவரம் குறித்து பக்தர்கள் பார்வையில்படும்படி விளம்பரப் பலகை வைக்கப்பட வேண்டும்.
13. திருக்கோயில் மூலம் விற்பனை செய்யப்படும் எந்த ஒரு பொருளையும் விற்பனை செய்ய அனுமதி கிடையாது.
14. குங்குமம் திருக்கோயில் மூலம் தயாரித்து விற்பனை செய்யப்படுவதால் குங்குமம் விற்பனை செய்ய அனுமதி இல்லை.
15. தீயணைப்பான் கருவிகள் **(Fire Safety EQuipments)** தங்கள் சொந்தப் பொறுப்பில் வாங்கி கடையின் முன்புறம் பொறுத்திக் கொள்ள வேண்டும். மேலும் மணலுடன் தீ தடுப்பு வாளி தங்கள் சொந்த செலவில் கடைகளில் பொறுத்தப்பட வேண்டும். முதல் உதவிப் பெட்டி இருக்க வேண்டும். எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை உபயோகப்படுத்தக்கூடாது. அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்பட்டால் திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.
16. கீழ்கண்ட விவரப்படி பட்டியலில் தெரிவித்துள்ள விலைக்கு மேல் விற்பனை செய்யக் கூடாது.

| வ. எண் | பூ மாலை விவரம் | 1 ½ அடி மாலை விலை ரூ | 2 அடி மாலை விலை ரூ | 3 அடி மாலை விலை ரூ |
|---|---|---|---|---|
| 1. | சம்பங்கி மாலை | 60.00 | 120.00 | 200.00 |
| 2. | கதம்ப மாலை | 40.00 | 80.00 | 120.00 |
| 3. | ரோஜா மாலை | 150.00 | 300.00 | 450.00 |

## இனம் –3

1. பக்தர்களால் காணிக்கையாகக் கொடுக்கப்படும் முடியினை மட்டும் சேகரம் செய்து எடுத்துக் கொள்ள வேண்டும்.
2. முடியிறக்கும் தொழிலுக்குத் தேவையான ஆட்களை நியமிப்பது திருக்கோயிலைச் சார்ந்தது.
3. முடியிறக்கும் தொழிலாளியின் பங்குத் தொகை கட்டணச் சீட்டு 1க்கு ரூ. 30 /– வீதம் கட்டணச் சீட்டுகளின் அடிப்படையில் கணக்கிட்டு திருக்கோயில் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

4. முடிசேகர உரிமதாரருக்கு கட்டணச் சீட்டில் எந்தவிதப் பங்குத் தொகையும் வழங்கப்படமாட்டாது.

5. சேகரம் செய்த முடியினை உடனுக்குடன் தன் சொந்தப் பொறுப்பில்அப்புறப்படுத்தி பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதற்கு திருக்கோயிலுக்கு சொந்தமான யாத்ரீகர்கள் ஓய்வு அறை எண் – 8ஐ வாடகையின்றி பயன்படுத்திக் கொள்ளலாம்.

6. இடத்தை டெட்டால் போன்ற கிரிமி நாசினி போன்றவற்றை பயன்படுத்தி சுகாதார முறையில் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

7. மேற்படி உரிமம் பெற்றவர் தமது சொந்தச் செலவில் தீயணைப்பான் கருவி **(Fire Safety Equipments )** மற்றும் மணலுடன் தீ தடுப்பு வாளி தங்கள் சொந்த செலவில் கடைகளில் பொறுத்தப்டவேண்டும். எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை உபயோகப்படுத்தக் கூடாது. அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்பட்டால் திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.

## இனம் – 4

1. உரிமதாரர் கீழ்க்கண்ட அம்மன் திருவுருவப் படங்களை தவிர வேறு எதுவும் விற்பனை செய்யக் கூடாது. கீழ்கண்ட விலைப் பட்டியலில் கண்டுள்ள அளவு மற்றும் விலையில்தான் தான் விற்பனை செய்ய வேண்டும். அதிகமாக தொகைக்கு விற்பனை செய்வதாக புகார்கள் வரப்படுமாயின் ஏல உரிமம் ரத்து செய்து சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

**அம்மன் படங்கள் விவரம்**

| வ. எண் | அளவு | படங்கள் விவரம் | விற்பனை விலை |
|---|---|---|---|
| 1. | 12 X 10 | அம்மன் படம் (பல வண்ண லைட்டுடன் ) | 550.00 |
| 2. | 8 X 6 | அம்மன் படம் ( பல வண்ண லைட்டுடன் ) | 350.00 |
| 3. | 15 X 11 | அம்மன் படம் ( உட்லேமினேசன் பெரியது ) | 250.00 |
| 4. | 10 X 7 | அம்மன் படம் ( உட்லேமினேசன் சிறியது ) | 150.00 |
| 5. | 8 X 6 | அம்மன் படம் ( கோல்டு பிரேம் பெரியது ) | 100.00 |
| 6. | 7 X 5 | அம்மன் படம் ( உட்லேமினேசன் சிறியது ) | 75.00 |
| 7. | 6 X 4 | அம்மன் படம் ( கோல்டு பிரேம் சிறியது ) | 50.00 |
| 8. | 6 X 4 | அம்மன் படம் ( உட்லேமினேசன் சிறியது ) | 50.00 |
| 9. | ஓவல் | அம்மன் படம் கீ செயின் | 25.00 |
| 10. | 8 X 6 | அம்மன் படம் ( மவுண்ட் பெரியது ) | 20.00 |
| 11. | 6 X 4 | அம்மன் படம் ( மவுண்ட் மீடியம் ) | 15.00 |
| 12. | 5 X 3 | அம்மன் படம் ( மவுண்ட் சிறியது) | 10.00 |
| 13. | 3 X 2 | அம்மன் படம் கார் ஸ்டேண்ட் | 25.00 |
| 14. | 2.5X 1.8 | அம்மன் படம் கண்ணாடி | 25.00 |
| 15. | 2 X 1 | அம்மன் படம் லைட் படம் | 30.00 |
| 16. | 1.3 X 1.8 | அம்மன் படம் கண்ணாடி | 15.00 |
| 17. | 3 X 2 | அம்மன் படம் பிளாஸ்டிக் ஸ்டேண்ட் | 15.00 |
| 18. | சதுரம் | அம்மன் படம் கீ செயின் | 15.00 |
| 19. | 6 X 4 | அம்மன் படம் பவுச்சு | 15.00 |
| 20. | ரவுண்ட் | அம்மன் படம் ஸ்டிக்கர் | 10.00 |

| | | | |
|---|---|---|---|
| 21. | ஓவல் | அம்மன் படம் டாலர் | 7.00 |
| 22. | 3 X 2 | அம்மன் படம் பாக்கெட் சைஸ் படம் | 5.00 |
| 23. | | அம்மன் படம் விபூதி பிரசாதம் | 3.00 |

2. திருக்கோயிலில் மற்ற உரிமதாரர்கள் மேலே கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள இனங்களை விற்பனை செய்தால் தங்களது சொந்தப் பொறுப்பில்தான் அப்புறப்படுத்தி கொள்ள வேண்டும்.

3. மேற்படி ஏல உரிமம் பெற்றவர் திருக்கோயில் மேற்குபுற பிரகார மண்டபத்திற்கு வெளியே பக்தர்கள் உணவருந்தும் மண்டபத்தை ஒட்டி வடக்குப்புறம் வடக்கு பார்த்த வகையில் பிரசாதக் கடைக்கு மேற்கே **10'X 10'** அடி அளவில் தங்களது சொந்த செலவில் தற்காலிக தகர சீட்டிலான தீப்பிடிக்காத செட் அமைத்து கொண்டு கடையை நடத்திக் கொள்ளலாம்.

4. இதற்கான தனி அறைகள் ஏதும் திருக்கோயில் மூலம் ஒதுக்கீடு செய்து தரப் பட மாட்டாது.

5. தீயணைப்பான் கருவிகள் **( Fire Safety EQuipments )** தங்கள் சொந்தப் பொறுப்பில் வாங்கி பொறுத்திக் கொள்ள வேண்டும். மேலும் மணலுடன் தீ தடுப்பு வாளி தங்கள் சொந்த செலவில் கடைகளில் பொறுத்தப்பட வேண்டும். முதல் உதவிப் பெட்டி இருக்க வேண்டும். எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை உபயோகப்படுத்தக்கூடாது. அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்பட்டால் திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.

6. திருக்கோயில் மூலம் விற்பனை செய்யப்படும் எந்த ஒரு பொருளையும் விற்பனை செய்ய அனுமதி கிடையாது.

7. ஏல உரிமையை எக்காரணம் கொண்டும் உள்குத்தகைக்கு விடவோ, பினாமி மூலம் நடத்தவோ உரிமை கிடையாது. மேலும் தன் விருப்பப்படி உரிமத்திலிருந்து விடுபடவும் உரிமையில்லை.

8. போட்டி காரணமாக ஏலத்தில் அதிகத் தொகை கேட்டு அதனால் பொருட்களை அதிக விலைக்கு விற்பதோ, நிர்பந்தம் செய்வதோ கூடாது. அவ்வாறு விற்பனை செய்து வருகின்ற போது பக்தர்களுக்கு இடையூறு ஏற்பட்டு புகார்கள் ஏதும் வருமானால் அப்போது உரிமைதாரர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு பூரண உரிமை உண்டு.

9. ஏலதாரர் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்து வியாபாரம் செய்யும் பொருட்களுக்கு அவரவர்களது சொந்தப் பொறுப்பில் தீ விபத்து மற்றும் இயற்கை பேரிடர்களுக்கான காப்புறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு காப்பீடு செய்யாத பட்சத்தில் திருக்கோயில் நிர்வாகத்திடமிருந்து நஷ்ட ஈடு கோரமாட்டோம் என குத்தகைப் பத்திரத்தில் எழுதிக் கொடுக்க வேண்டும்.

10. திருக்கோயில் நலன் கருதி உரிமம் பெற்றவர்களுக்கு ஏலம் விடப்பட்ட இடத்திற்கு பதிலாக வேறு மாற்று இடம் ஒதுக்கீடு செய்ய நிர்வாகத்தினருக்கு உரிமையுண்டு. இதை ஆட்சேபிக்க உரிமம் பெற்றவர்களுக்கோ, அல்லது வேறு யாருக்கும் உரிமை கிடையாது.

11. குங்குமம் பிரசாத பாக்கெட்களை விற்பனை செய்யக்கூடாது. மீறினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

12. உரிமம் பெற்றவர்கள் "தேவஸ்தான கடை" என்று திருக்கோயில் பெயரை பயன்படுத்தி விளம்பரப் பலகை வைக்கக் கூடாது.

13. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி விலை விவரம் போன்றவை பொது மக்களுக்கு நன்கு தெரியும் வகையில் ஒப்பந்ததாரர்கள் தேவையான அளவில் விளம்பரப் பலகைகள் திருக்கோயில் நிர்வாகம் குறிப்பிடும் எண்ணிக்கை மற்றும் இடத்தில் எழுதி வைக்க வேண்டும். தவறினால் திருக்கோயில் மூலம் விளம்பரப் பலகை எழுதி வைக்கப்பட்டு அதற்கான செலவுகள் ஒப்பந்ததாரர்களது காப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

14. திருவிழா காலம் மற்றும் முக்கியமான பண்டிகை நாட்களில் ஏலத்தில் குறிப்பிட்ட இடத்திலிருந்து கடையினை அகற்றி திருக்கோயில் நிர்வாகம் குறிப்பிடும் இடத்தில்தான் விற்பனை செய்து கொள்ள வேண்டும்.

## இனம் – 5

1. காலாவதியான மாவுப்பொருட்களைக் கொண்டு உணவு தயாரிக்கப்பட்டு ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால் அதற்கு உரிமதாரரே முழுப்பொறுப்பாவார். இதற்கு திருக்கோயில் நிர்வாகம் எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது.
2. உணவு வகைகள் குறித்தான விலைப்பட்டியல் கடைகளின் முக்கிய இடத்தில் பொது மக்கள் பார்வையில் படும்படி தமிழில் எழுதி வைக்கப்பட வேண்டும்.
3. உணவு விடுதி சமையல் கூடத்திலிருந்து வெளியேறும் புகை பக்தர்களுக்கோ, பக்கத்துக் கடைகளுக்கோ இடையூறு செய்யா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். கழிவு நீர் பாதையை உடனுக்குடன் சுத்தம் செய்து பினாயில் தெளித்து சுத்தமாய் வைத்திருக்க வேண்டும்.
4. **FSSAI , ISI** உரிமம் பெற்ற குளிர் பானங்கள் தண்ணீர் பாட்டில்களை விற்பனை செய்ய வேண்டும். FSSAI தரச்சான்றிதழ் பெற்ற பொருட்களைக் கொண்டே உணவுப் பொருட்களை தயாரிக்க வேண்டும்.
5. சைவ உணவு விடுதி எண். 1ஐ வைத்து நடத்தும் உரிமத்தினை ஏலம் / டெண்டர் எடுத்தவர் சருகு மாரியம்மன் திருக்கோயில் செல்லும் பாதையின் தெற்குப்புறம் ( மின்சார அறைக்கு அருகில் ) 20' X 25' அடி அளவில் தனது சொந்த செலவில் தற்காலிக தகர சீட்டிலான தீப்பிடிக்காத செட் அமைத்து கொண்டு கடையை நடத்திக் கொள்ளலாம்.
6. திருக்கோயில் அனுமதியின்றி வருமானம் வரத்தக்க வேறு தொழில் ஏதும் மேற்படி இடத்தில் நடத்தக் கூடாது. மீறினால் ஏல உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் காப்புத் தொகை திருக்கோயிலுக்கு ஆதாயமாக்கப்படும்.
7. பீடி, சிகரெட், புகையிலை லாகிரி வஸ்துக்கள், பாலித்தீன் தண்ணீர் பாக்கெட் விற்பனை செய்யக் கூடாது. உணவுப் பாதுகாப்புத் துறைச் சான்று சொந்தப் பொறுப்பில் பெற்றுக் கொள்ள வேண்டும்.
8. தீயணைப்பான் கருவிகள் **(Fire Safety EQuipments)** தங்கள் சொந்தப் பொறுப்பில் வாங்கி சமையல் தயார் செய்யுமிடத்தில் பொறுத்திக் கொள்ள வேண்டும். மேலும் மணலுடன் தீ தடுப்பு வாளி தங்கள் சொந்த செலவில் கடைகளில் பொறுத்தப்பட வேண்டும். முதல் உதவிப் பெட்டி இருக்க வேண்டும். எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை உபயோகப்படுத்தக்கூடாது. அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்பட்டால் திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.

9. உரிம ஆணை கிடைக்கப்பெற்ற ஒரு மாத காலத்திற்குள் உணவு பாதுகாப்பு துறையில் பொருட்களை விற்பனை செய்வதற்காக FSSAI உரிமம் பெற்று சான்றொப்பமிடப்பட்ட நகல் ஒன்றினை சமர்ப்பிக்க வேண்டும்.

10. உணவு தயார் செய்யும் இடத்தில் பயன்படுத்தப்படும் எரிவாயு அடுப்பு, எரிவாயு குழாய் மற்றும் ரெகுலேட்டர் ஆகியவை நல்ல நிலையில் இருப்பதை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அங்கீகரிக்கப்பட்ட எரிவாயு நிறுவனத்தின் தேர்ந்த மெக்கானிக்கைக் கொண்டு உறுதி செய்துக் கொள்ள வேண்டும். அதற்கான அத்தாட்சியை திருக்கோயில் நிர்வாகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். மேற்படி எரிவாயு இணைப்புக்களை காலமுறையில் சீரமைப்பு செய்யும் பணிக்கு AMC போடப்பட வேண்டும். அதற்கான அத்தாட்சியை சமர்ப்பிக்க வேண்டும்.

11. காலாவதி தேதி மற்றும் தயாரிப்பு தேதி குறிப்பிடாத எந்த பொருட்களையும் விற்பனை செய்யக் கூடாது.

12. காலாவதியான பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்ட உணவு பொருட்களை விற்பனை செய்யக்கூடாது.

13. உணவுவிடுதி தூய்மையாக இருக்க வேண்டும். உணவு பொருட்கள் தயார் செய்யும் இடம் மற்றும் உணவு தயார் செய்யப் பயன்படுத்தும் பாத்திரங்கள் தூய்மையாக இருக்க வேண்டும்.

14. திருக்கோயிலில் தயாரிக்கப்படும் பிரசாதங்கள் Packege Date , Expiry Date, Trade Mark, Storage Container குறித்த விபரங்களை FSSAI க்கு அனுப்பி சான்றிதழ் பெற வேண்டும்.

15. உணவு பதப்படுத்துதல் மற்றும் தரப்படுத்துதல் ஆணையத்தின் தரக்கட்டுப்பாடு, விற்பனை மற்றும் தயாரிப்பு முறைகளை பின்பற்ற வேண்டும்.

16. Food Safety and Standard Act , Weight and Measures Act, Packaged Commodities Act பிரிவுகளின் படியான நெறிமுறைகளை பின்பற்றப்பட வேண்டும். பின்பற்றாமல் அதனால் ஏற்படும் அனைத்து விளைவுகளுக்கும் ஏலதாரரே முழுப் பொறுப்பாக்கப்படுவார். இதற்கு திருக்கோயில் நிர்வாகம் எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது.

17. திருக்கோயில் மூலம் விற்பனை செய்யப்படும் எந்த ஒரு பொருளையும் விற்பனை செய்ய அனுமதி கிடையாது.

18. பிரசாதக்கடைகளில் விற்பனை செய்யப்படும் எந்தவொரு பொருளையும் விற்பனை செய்யக்கூடாது.

19. உரிமம் பெற்றவர்கள் “ தேவஸ்தான கடை” என்று திருக்கோயில் பெயரை பயன்படுத்தி விளம்பரப் பலகை வைக்கக் கூடாது.

20. ISI தரம் பெற்ற தண்ணீர் பாட்டில்களை விற்பனை செய்ய வேண்டும். உணவகத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரையே உபயோகப்படுத்தப்பட வேண்டும்.

21. கீழ்க்கண்ட விலைப்பட்டியல்படி தான் பொருட்கள் விற்பனை செய்யப்பட வேண்டும்.

| வ.எண் | பொருட்கள் விவரம் | விலை விவரம் |
|---|---|---|
| 1. | டீ, பால் | 7.00 |
| 2. | காபி | 10.00 |
| 3. | சாப்பாடு | 50.00 |
| 4. | இட்லி 2க்கு | 10.00 |
| 5. | தோசை 1க்கு | 10.00 |
| 6. | ஊத்தாப்பம் 1க்கு | 15.00 |
| 7. | ஸ்பெஷல் ரோஸ்ட் | 15.00 |
| 8. | பூரி 1 செட் கிழங்குடன் | 25.00 |
| 9. | புரோட்டா 1க்கு | 15.00 |
| 10. | சப்பாத்தி 2க்கு | 30.00 |
| 11. | வடை 1க்கு | 10.00 |
| 12. | கலவை சாதம் | 30.00 |

இனம் – 6

1. நெய் தீபம் ஒன்று ரூ. 5 /– (ரூபாய் ஐந்து மட்டும் ) என விற்பனை செய்யப்பட வேண்டும்.

2. நெய் தீபம் ஒன்றுக்க 10 கிராம் நெய் இட வேண்டும்.

3. ஏலம் / டெண்டர் உரிமதாரர் அவரது செலவில் மண் விளக்கு, திரி போன்ற இனங்கள் கொள்முதல் செய்து கொள்ள வேண்டும்.

4. பக்தர்கள் வருகை அதிகம் உள்ள நாட்களில் கூடுதல் பணியாளர்களை உரிமதாரர் தனது பொறுப்பில் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

5. ஏலம் / டெண்டர் உரிமதாரர் சுகாதாரக்கேடு ஏற்படா வண்ணம் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

6. திருக்கோயில் முன் தென்மேற்கு மூலையில் ஒரே இடத்தில் மட்டும் தங்கரத ஓடுபாதைக்கு இடையூறு இல்லாமல் நெய் தீப விற்பனை செய்ய வேண்டும்.

7. ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை மாலை நெய்தீப விற்பனை செய்யும் இடத்தை நன்கு தேய்த்து கழுவி சுத்தம் செய்ய வேண்டும்.

8. ஆவின் நிறுவனத்தின் மூலம் மட்டுமே நெய் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

9. ஒரு நெய் விளக்கு கேட்டும் பக்தர்களுக்கு விளக்கு வழங்க வேண்டும்.10 நெய் விளக்கு தட்டில் வைத்து விற்பனை செய்யகூடாது. பெரிய விளக்குகள் ரூ100 /– நெய் தீபம் விற்பனை செய்ய கூடாது.

10. பயன்படுத்தபட்ட நெய் விளக்கினை மீண்டும் பக்தர்களுக்கு விற்பனை செய்யக்கூடாது. பக்தர்களிடமிருந்து புகார்கள் ஏதேனும் வரப்படுமாயின் தங்கள் செலுத்திய காப்பு தொகை திருக்கோயிலுக்கு பறிமுதல் செய்யப்படும்.

# பொது நிபந்தனைகள்

1. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைப்படி வைப்பு தொகைகள் யாவும் **Deputy Commissioner / Executive Officer, Arulmigu Bannari Mariamman Thirukoil, Bannari** என்ற பெயரில் வங்கியின் மூலம் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை, வங்கி வரைவோலை, சேமிப்பு முறி, வங்கி உத்திரவாதம் இவற்றில் ஏதேனும் ஒன்று இந்தியன் ஒவர்சீஸ் வங்கியின் ராஜன்நகர் – 1023 கிளையில் செல்லத்தக்க வகையில் வைப்புத் தொகை செலுத்தி ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் வைப்புத் தொகை ரொக்கமாக பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.
2. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கலந்து கொள்பவர்கள் வருமானவரி நிரந்தர கணக்கு எண். ( PAN Card ) மற்றும் GST எண் உள்ளவர்கள் மட்டும் தான் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.
3. உயர்ந்த கேள்விதாரர் தான் கோரிய ஏலத்தொகை முழுவதும் ஏலம் முடிந்தவுடன் அன்றே செலுத்தி விட வேண்டும். அவ்வாறு செலுத்த தவறினால் வைப்புத் தொகை பறிமுதல் செய்வதோடு உயர்ந்த கேள்வி கேட்ட ஏல உரிமைதாரரால் திருக்கோயிலுக்கு ஏற்படும் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி ஏலத்தை ரத்து செய்து விட்டு மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி நடத்தப்படும். அவ்வாறு மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி நடத்தினால் அப்போது மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி தொகையில் குறைவு ஏற்பட்டால் அதனால் ஏற்படும் இழப்புக்கு சம்பந்தப்பட்ட உயர்ந்த கேள்விதாரரை பொறுப்பாக்கி எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள திருக்கோயில் துணை ஆணையர் / செயல் அலுவலருக்கு பூர்ண உரிமையுண்டு. மேலும் எந்த ஒரு ஏலத்திலும் அன்னார் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். திருக்கோயிலுக்கு ஏற்படும் இழப்பிற்கு தொகை செலுத்தத் தவறிய உயர்ந்த கேள்விதாரரே முழுப் பொறுப்பாக்கப்படுவார்.
4. உயர்ந்த கேள்விதாரர் அந்தந்த இனத்திற்குரிய காப்புத் தொகையை ரொக்கமாக செலுத்த வேண்டும். ஏல நிபந்தனைகளை மீறினால் காப்புத் தொகை திருக்கோயிலுக்கு ஆதாயமாக்கப்படும். இந்த காப்புத் தொகை பசலி முடிந்த பின்னர் தான் திருப்பித் தரப்படும். இதற்கு (காப்புத்தொகை) வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.
5. ஏலம் இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்குட்பட்டு நடத்தப்படும். அதன்படி ஏலம் அறநிலையத்துறை ஆணையரது மறுபாணைக்குட்பட்டு உறுதி செய்யப்படும்.
6. ஏல சம்பந்தமாக ஏற்படும் எல்லாவிதமான ஐயப்பாடுகளுக்கும் திருக்கோயில் துணை ஆணையர் / செயல் அலுவலர் முடிவே இறுதியானதும் கட்டுப்பட்டதுமாகும்.
7. திருக்கோயிலுக்கு எந்த வகையிலும் பாக்கிதாரர்களோ, திருக்கோயில் நிர்வாகத்திற்கு இடையூறு செய்தவர்களோ, திருக்கோயில் நலனுக்கு விரோதமாக செயல்பட்டவர்களோ, திருக்கோயிலுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தவர்களோ ஏலத்தில் கண்டிப்பாக கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.
8. விளக்குகள் திரி விற்பனை செய்யக் கூடாது. நெய் எண்ணெய் பாக்கெட், சூடம் மற்றும் சாம்பிராணி நெய் பாக்கெட் விற்பனை செய்யக் கூடாது.
9. ஏலத்தின் போது எந்த ஒரு இனத்திற்கும் திருக்கோயில் ஆரம்பக் கேள்வி சந்தர்ப்பம் போல நிர்ணயம் செய்யப்படும். யாதொரு காரணம் கூறாமல் ஏலம் ஒத்தி வைக்கவும், மீண்டும் குறிப்பிட்ட தேதியில் நடத்தவும், மறு ஏலம் விடவும் திருக்கோயில் நிர்வாகிகளுக்கு பூர்ண உரிமையுண்டு.

10. உரிமதாரர் தானாக முன்வந்து உரிமத்தினை ஒப்படைப்பு செய்ய நேர்ந்தால் ஒப்பந்தப்புள்ளித் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது. மேலும் மறு ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்படும். மறு ஏலத்தில் நஷ்டம் ஏற்பட்டால் உரிமதாரரே இதற்கு பொறுப்பாவார்.

11. மின் கட்டணம் கடை உரிமைதாரர்களே தன் சொந்தப் பொறுப்பில் திருக்கோயில் பெயரில் செலுத்திக் கொள்ள வேண்டும்.

12. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி டெபாசிட் செலுத்தியவர்கள் சம்மந்தப்பட்ட ஏல இனத்தை பார்வையிட்டும், ஏல நிபந்தனைகளை நன்கு அறிந்தும், ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்களாக கருதப்படுவார். ஏலம் முடிவு செய்தபின் கூறப்படும் எவ்வித ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

13. உரிம இனங்களுக்கு வருமானவரி நடைமுறை விதிகளின்படி 2% மற்றும் GST 18% ( CGST 9%, SGST 9%) ஏலத்தொகையினை கணக்கிட்டு திருக்கோயிலில் செலுத்த வேண்டும்.

14. ஏலத்திற்கு முன்னரோ / பின்னரோ, ஏல உரிமகாலத்தின் போதோ எந்த நேரத்திலும் ஏல நிபந்தனைகளைக் கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ, திருத்தவோ, ஏலத்தைத் தள்ளி வைக்கவோ, ஏலத்தை நிறுத்தவோ, ஏலக் கேள்வியினை நிராகரிக்கவோ, திருக்கோயில் துணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களுக்கு பூர்ண உரிமையுண்டு.

15. ஏல உரிமைக்காலம் முடிந்தவுடன் **30.06.2023** அன்று ஏல உரிமையை எவ்வித சேதமும் இல்லாமல் காலி செய்து திருக்கோயில் வசம் ஒப்படைக்க வேண்டும். மேலும் ஏல உரிமைக் காலம் முடிந்ததும் சொத்து கோயிலுக்கு தாமாகவே சுவாதீனம் வந்ததாகக் கருதப்படும். இதில் ஏதேனும் திருக்கோயிலுக்கு இழப்பு நேரிட்டால் இதற்கு உரிமைதாரரே முழுப்பொறுப்பாவார்.

16. ஏல உரிமையை எக்காரணம் கொண்டும் உள்குத்தகைக்கு விடவோ, பினாமியில் நடத்தவோ உரிமை கிடையாது. மேலும் தன் விருப்பப்படி உரிமத்திலிருந்து விடுபடவும் உரிமையில்லை.

17. போட்டி காரணமாக அதிகத் தொகை கேட்டு அதனால் பொருட்களை அதிக விலைக்கு விற்பதோ, நிர்பந்தம் செய்வதோ கூடாது. அவ்வாறு விற்பனை செய்து வருகின்ற பொது மக்களும், பக்தர்களுக்கும் இடையூறு ஏற்பட்டு புகார்கள் ஏதும் வருமானால் அப்போது உரிமைதாரர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு பூரண உரிமை உண்டு.

**18. உரிமம் பெற்றவர்கள் இந்து சமயத்தை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.**

19. ஏலதாரர்கள் தங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்ட இடத்தில் வைத்து வியாபாரம் செய்யும் பொருட்களுக்கு அவரவர்களது சொந்தப் பொறுப்பில் தீ விபத்து மற்றும் இயற்கை உபாதைகளுக்கான இன்சூரன்ஸ் எடுக்க வேண்டும். அவ்வாறு இன்சூரன்ஸ் செய்யாதபட்சத்தில் திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பாகாது. மேலும் திருக்கோயில் நிர்வாகத்திடமிருந்து நஷ்ட ஈடு கோரமாட்டோம் என்று குத்தகைப் பத்திரத்தில் எழுதிக் கொடுக்க வேண்டும். மேலும் மணலுடன் தீ தடுப்பு வாளி தங்கள் சொந்த செலவில் கடைகளில் பொறுத்தப்பட வேண்டும்.

20. ராஜீகம், தெய்வீகம், நீர், நெருப்பு, காற்று போன்ற இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் இழப்புகளுக்கும், அசாதாரண விபத்துகளுக்கும் மற்றும் அசம்பாவித சம்பவங்களால் ஏற்படும் இழப்புகளுக்கும், விபத்துகளுக்குத் திருக்கோயில் நிர்வாகம் எந்த வகையிலும் பொறுப்பு ஏற்காது சம்பந்தப்பட்ட ஏலம் / ஒப்பந்தப்புள்ளிதாரரே பொறுப்பு ஏற்க வேண்டும். தமது சொந்த செலவினில் காப்பீடு செய்து இழப்பீடு வழங்க ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

21. ஒவ்வொரு ஏல இனமும் ஏலம் முடிந்த பின்னர் அந்த இனத்திற்குரிய ஒப்பந்தப்புள்ளிகள் துறை அதிகாரிகள் முன்னிலையில் திறக்கப்பட்டு எது அதிகமோ, அது உறுதி செய்யப்படும். அதாவது ஏலத்தொகையினை விட ஒப்பந்தப்புள்ளித்தொகை அதிகமாக இருந்தால் ஏலத்தொகை நிராகரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளித் தொகை ஏற்றுக் கொள்ளப்படும். ஏலத்தொகையை விட ஒப்பந்தப்புள்ளித் தொகை குறைவாக இருந்தால், ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டு ஏலத் தொகை ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆணையர் ரத்து அங்கீகாரத்திற்குட்பட்டு பதிவு செய்யப்படும்.
22. திருக்கோயில் நலன் கருதியும், பக்தர்கள் நலன் கருதியும், உரிமம் பெற்றவர்களுக்கு தற்போது ஏலட் விட்ட இடத்திற்கு பதிலாக வேறு மாற்று இடம் கொடுக்க நிர்வாகத்திற்கு பூர்ண உரிமை உண்டு. இதை ஆட்சேபிக்க உரிமம் பெற்றவர்களுக்கோ அல்லது வேறு யாருக்கோ உரிமம் கிடையாது.
23. திருக்கோயில் நலன் கருதி கட்டிடங்களில் மாறுதல் அபிவிருத்தி பணிகள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் உரிமம் காலத்தில் ரத்து செய்து கட்டிடத்தை திரும்ப எடுத்துக் கொள்ள திருக்கோயிலுக்கு அதிகாரம் உண்டு. இதில் உரிமதாரர் ஏதும் நஷ்ட ஈடு கோர உரிமை இல்லை.
24. மது அருந்தியவர்களோ அல்லது லாகிரி வஸ்துக்களை அருந்தியவர்களோ இந்த ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.
25. திருக்கோயில் அலுவலகத்தில் வழங்கப்படும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை மட்டுமே பயன்படுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வேண்டும்.
26. திருக்கோயில் ஊழியர்களோ, ஊழியர்களுக்கு உறவினர்களோ ஏலத்தில் கண்டிப்பாக கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது. பினாமி பெயரில் எவரும் ஏலம் எடுக்கக்கூடாது.
27. ஏலத்தில் கேள்வித் தொகை இனம் 1 – 5 வரை ரூ. 1000 /- க்கும் குறைவாக கேட்க அனுமதிக்க இயலாது.
28. ஏலம் எடுத்த உரிமைதாரர்கள் கடைகளில் ரேடியோ மற்றும் டேப் ரிக்கார்டுகளை வைத்து பக்தர்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் ஒலிபரப்பிக் கொள்ள வேண்டும். இது குறித்து புகார்கள் ஏதும் வரப்பெறின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
29. ஏல நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையை மீறினாலும் முன்னறிவிப்பின்றி ஏல உரிமம் ரத்து செய்யப்படும்.
30. திருக்கோயில் நலன் கருதியும், பக்தர்களின் நலன் கருதியும், உரிமம் பெற்றவர்களுக்கு ஏலம் விட்ட இடத்திற்கு பதிலாக வேறு மாற்று இடம் கொடுக்க திருக்கோயில் நிர்வாகத்தினருக்கு உரிமையுண்டு. இதை ஆட்சேபிக்க உரிமம் பெற்றவர்களுக்கோ, அல்லது வேறு யாருக்கும் உரிமை கிடையாது.
31. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உரிமம் பெற்றவர் 7 தினங்களுக்குள் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிந்தனைகளுக்குட்பட்டு ரூ. 50/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் குத்தகைப் பத்திரம் தனது சொந்த செலவில் எழுதிக் கொடுக்க வேண்டும். ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்காவிடில் சம்பந்தப்பட்ட உரிமம் அனுபவிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். தேவையெனில் தமது சொந்த பொறுப்பில் ரிஜிஸ்டர் செய்து கொடுக்க வேண்டும்.
32. ஏலம் உரிமம் பெற்றவர்கள் திருக்கோயில் வளாகத்திற்குள் உள்ளே சுற்றுச்சுவர் ஒட்டியுள்ள இடத்தில் எந்த ஒரு கடையும் வைத்து விற்பனை செய்ய அனுமதி இல்லை.
33. எதிர்வரும் காலங்களில் ஏற்படும் அரசின் கொள்கை முடிவுகளுக்கு ஏற்ப ஏல உரிமைதாரர்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

34. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் முழுவிபரங்களும், நிபந்தனைகளும், தெரிந்தே கலந்து கொண்டதாக கருதப்படுவார்கள். நடவடிக்கை முடிவு செய்த பின்பு கூறும் எவ்வித ஆலோசனைகளையும் ஆட்சேபனைகளையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

35. உரிமம் இனங்களுக்கு விற்பனை வரி மற்றும் ஏதேனும் அரசு வரிகள் செலுத்த வேண்டியிருந்தால் உரிமைதாரர் தன் சொந்தப் பொறுப்பில் மேற்படி வரிகள் செலுத்திக் கொள்ள வேண்டும். மேற்படி வரிகள் சம்பந்தமாக இத்திருக்கோயிலுக்கு யாதொரு சம்பந்தமும் கிடையாது.

36. உரிமைதாரர் பசலியாண்டில் இறந்து போனால் வாரிசுகளோ அல்லது அட்மினிஸ்ட்ரேட்டர்களோ நிபந்தனைகளை நிறைவேற்ற கடமைப்பட்டவராவார். ஆனால் உரிமத்தினை நிர்வாகத்தினர் முடிவு செய்யும் பட்சத்தில் வாரிசுதாரர்கட்கு உரிமம் பாத்தியதை இல்லை. புதிய நடவடிக்கை மேற்கொண்டு வேறு நபருக்கு உறுதி செய்ய நிர்வாகத்தினருக்கு பூரண உரிமையுண்டு.

37. உரிமைதாரர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திருக்கோயில் கட்டிடங்களுக்கு திருக்கோயில் அனுமதியின்றி எவ்வித மாற்றங்களோ அல்லது மராமத்து வேலைகளோ செய்யக் கூடாது. மேற்படி கட்டிடங்களை உள்குத்தகைக்கோ அல்லது தினசரி வாடகைக்கோ விடக் கூடாது. மீறினால் ஏலம் ரத்து செய்யப்படும்.

38. ஏல உரிமதாரர்கள் அனைவரும் **பாலித்தின் மற்றும் பிளாஸ்டிக் கவர்களை** பயன்படுத்தக் கூடாது. **பாலித்தின் மற்றும் பிளாஸ்டிக் கவர்கள்** பயன்படுத்தப்பட்டால் அவற்றை பறிமுதல் செய்யவும் அபராதம் விதித்து காப்புத் தொகையில் பிடித்தம் செய்யவும், ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உரிமத்தை ரத்து செய்யவும், திருக்கோயில் நிர்வாகத்திற்கு பூரண அதிகாரம் உண்டு.

39. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை (விலை விவரம் போன்றவை) பொது மக்களுக்கு தெரியும் வகையில் ஒப்பந்ததாரர்கள் தேவையான அளவில் விளம்பரப் பலகைகள் திருக்கோயில் நிர்வாகம் குறிப்பிடும் எண்ணிக்கையில் எழுதி வைக்க வேண்டும். தவறினால் திருக்கோயில் மூலம் விளம்பரப் பலகை எழுதி வைக்கப்பட்டு அதற்கான செலவுகள் ஒப்பந்ததாரர்களது காப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

40. திருக்கோயில் மற்றும் பக்தர்களின் பாதுகாப்புக்கருதி தீயணைப்பான் கருவிகள் **( Fire Safety EQuipments)** தங்கள் சொந்தப் பொறுப்பில் வாங்கி பொறுத்திக் கொள்ள வேண்டும். மேலும் மணலுடன் தீ தடுப்பு வாளி தங்கள் சொந்த செலவில் கடைகளில் பொறுத்தப்பட வேண்டும். அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்பட்டால் திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.

41. மேற்படி உரிம இனத்திற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி முடிந்து பலன் அடைந்தவர்கள் Income Tax office 1961ன் சட்டப்படி உரிய தொகை உடன் செலுத்த வேண்டும். மேலும் வருமானவரி நிலையான கணக்கு எண் ( Pan Certificate) தாக்கல் செய்ய வேண்டும்.

42. அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து வரிகளையும் GST மற்றும் வருமானவரி போன்றயாவும் சம்மந்தப்பட்ட துறைகளிடம் செலுத்த வேண்டும். செலுத்த தவறினால் அதனால் ஏற்படும் அனைத்து விளைவுகளுக்கு ஏலதாரரே பொறுப்பாவார்.

43. உணவுப் பொருட்கள் மற்றும் உணவு பொருட்கள் தயார் செய்து விற்பனை செய்யும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உரிமைதாரர்கள் உணவு பாதுகாப்புத் துறையில் உணவு தரச் சான்று சொந்தப் பொறுப்பில் பெறப்பட வேண்டும்.

44. அரசு உத்தரவின்படி பீடி, சிகரெட், புகையிலை லாகிரி வஸ்துக்கள், பாலீத்தின் பைகளில் நிரப்பப்பட்ட தண்ணீர் பாக்கெட் விற்பனை செய்யக் கூடாது.

**45. உரிமம் பெற்றவர்கள் " தேவஸ்தான கடை" என்று திருக்கோயில் பெயரை பயன்படுத்தி விளம்பரப் பலகை வைக்கக் கூடாது.**

46. தயாரிப்புத் தேதி மற்றும் காலாவதி தேதி குறிப்பிடாத எந்த உணவு பொருட்களையும் விற்பனை செய்யக் கூடாது. காலாவதியான மாவு பொருட்களை கொண்டு உணவுப் பொருட்களை தயாரிக்கக் கூடாது. காலாவதியான குளிர்பானங்கள், குளிர்பானங்கள் தயாரிக்க சுகாதாரமற்ற முறையில் வைக்கப்பட்டிருக்கும் ஐஸ்கட்டிகளைப் பயன்படுத்தக் கூடாது.

47. இதர நிபந்தனைகள் ஏலத்தின் போது அறிவிக்கப்படும்.

இங்ஙனம்,

வீ. புருசோத்தமன்,
ராஜாமணி தங்கவேல்,
புஷ்பலதா கோதண்டராமன்,
வீ. மகேந்திரன்,
( பரம்பரை அறங்காவலர்கள் )

இரா. மேனகா,
துணை ஆணையர் / செயல் அலுவலர்

இடம் : பண்ணாரி.
நாள் : **24.05.2022**